**செய்தி வெளியீடு எண் : 1240** **நாள் : 26.06.2023**

**2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ள தமிழ்நாடு அணி மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து**

2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி பஞ்சாப் மாநிலம், அம்ரிஸ்தரில் ஜூன் 12ஆம் தேதி முதல் முதல் 28ஆம் தேதி வரை நடைபெற்று வருகிறது. இன்று (26.06.2023) நடைபெற்ற தமிழ்நாடு அணி மற்றும் இரயில்வே அணிக்கு எதிரான அரையிறுதியில் தமிழ்நாடு அணியானது 3–1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள தமிழ்நாடு அணியினைப் பாராட்டி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்த அணியில் உள்ள 12 வீராங்கனைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பயிற்சி பெற்ற முன்னாள் மாணவியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 5 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாடு சீனியர் பெண்கள் கால்பந்து அணி இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. 2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிப்போட்டி 28.06.2023 அன்று நடைபெறவுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in